18.06.2024

O.S.No.184/2019

வா.சா.1.திரு.அழகர்  த.பெ.சுப்பிரமணி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் BSC பட்டதாரி. எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் தற்போது மதுரை கிருஷ்ணாபுரம் காலனி, முல்லை நகரில் வசித்து வருகிறேன். நான் குடியிருககும் பகுதியில் இருந்து தாவா சொத்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் இருககும். சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்டதுதான் தாவா சொத்து என்றால் சரிதான். நான் 1997ல் தாவாசொத்தினை கிரையம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் காணப்படுவதுதான் தாவா சொத்து என்றால் சரியல்ல. எனக்கு முன்பு அசல் வழக்கு எண்.156/2019 மற்றும் 193/2019 அகிய வழக்குகளில் சாட்சியம் அளித்த வா.சா.1 என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் காணப்படுவது தாவா சொத்துதான் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அவர்கள் தவறுதலாக சாட்சியம் அளித்துள்ளார்கள். தாவா சொத்து ஆரம்பத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று ஒப்புக்கொண்டு பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தற்போது தாவாசொத்தில் முள்கம்பி வேலி அமைக்கப்பட்டு கேட் போடப்பட்டுள்ளது என்றால் அதில் கேட் எதுவும் கிடையாது, ஆனால் முள் வேலி அமைக்கப்பட்டுள்ளது. அந்த முள்கம்பிவேலிக்குள்ளேதான் தாவா சொத்து உள்ளது என்றால் சரதிான். பிரதிவாதிகள் பள்ளி நிர்வாக அனுமதி இல்லாமல் தற்போது தாவா சொத்திற்குள் யாரும் செல்ல முடியாது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன முள்கம்பி வேலி அமைக்கப்பட்டு 15 ஆண்டுகள் இருக்குமா என்றால் 2019ம் ஆண்டுதான் முள்கம்பி வேலி அமைத்தார்கள், அதை எதிர்த்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கோபாலகிருஷ்ண பள்ளி சுமார் 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்றால் அந்த விவரம் எனக்கு சரியாக தெரியாது. கோபாலகிருஷ்ண பள்ளி 50 ஆண்டுகள் பழமையான பள்ளி என்பதனை தெரிந்து கொண்டும், இந்த வழக்கோடு தொடர்புடைய மற்ற வழக்குகுளில் சாட்சியம் அளித்தவர்கள் அதை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதனை தெரிந்து கொண்டு இந்த வழக்கிற்காக அதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண பள்ளியின் மேற்கு திசையில் பிரதான வாயில் உள்ளது. சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் கட்டுப்பட்ட சொத்தில் தான் கோபாலகிருஷ்ண பள்ளி, வியைாட்டு மைதானம், பள்ளி விடுதி ஆகியவை அடங்கியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை தற்போது என்னால் அடையாளம் காட்ட இயலாது என்றால் சர்வே கற்களை பிடுங்கி விட்டதால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான்.

3. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்து சர்வே எண்.169/1ல் கட்டுப்பட்டது. பிரதிவாதியை எனக்கு தெரியும். பிரதிவாதிகள் வகையறா பள்ளி, கல்லூரிகள் வைத்து நடத்தி வரும் மிகப்பெரிய குடும்பம் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு நிறைய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். எனது குழந்தையும் பிரதிவாதிகள் நடத்தி வரும் யாதவா கல்லூரியில்தான் படித்து

வந்தார்கள். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது என்று அவர்களுக்கே தெரியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் 20.04.1996 தேதியிட்ட வா.சா.ஆ-6 கிரைய ஆவணத்தின் அசல் மற்றும் அவர் பொது அதிகாரம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ-2 ஆகிய ஆவணத்தின் அசல் ஆவணத்தினை நான் பார்த்தில்லை என்றால் சரிதான், ஆனால் நான் நகலை பார்த்துள்ளேன். நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் போது அந்த சொத்து அய்யனாருக்கு முறையான கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதா என்பதனையும், அவர் பெற்றதாக சொல்லப்படும் பொது அதிகார ஆவணம் உண்மையான என்பதனையும், நான் தீர விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் நகலை பார்த்து விசாரித்து தெரிந்து கொண்டேன்.

4. நான் தாவாசொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் 1997 கால கட்டங்களிலே எனக்கும், பிரதிவாதி வகையறாவிற்கும் பிரச்சினை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தினை கம்பிமுள்வேலி அமைத்து பராமரிக்கவில்லை என்றால் சரிதான், சர்வே கற்கள் ஊன்றி இருந்தேன். நான் தாவா சொத்தில் கம்பிமுள்வேலி அமைத்து பராமரித்து வந்தேன் என்று சொல்லி இருந்தால் அது தவறு. தாவா சொத்து தற்போது முற்கள் நிறைந்து காணப்படுகிறது. தாவாசொத்து விளையாட்டு மைதானத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானத்தில் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சர்வே எண்.169/1ல் கட்டுப்பட்டது. தாவா சொத்தினை தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றால், சர்வே கற்களை பிடுங்கிவிட்டதால் என்னால் அடையாம் காட்ட முடியாது. தாவா சொத்து உள்ளடங்கிய சர்வே எண்.169/1 சர்வே எண்.169/2 ஆகியவற்றில் கட்டுப்பட்ட சொத்துக்களை எந்த காலத்திலும் பிரதிவாதிகளோ, இளம்ஜி சௌந்திராஜனோ, யாருக்கும் எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக அய்யனார் பெயரில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களை வைத்து, நான் வீண் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை இளம்ஜி சௌந்திராஜன், அய்யனார் என்பவருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கவோ பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

5. அய்யனாருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணம் பற்றியும், பொது அதிகார ஆவணம் பற்றியும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், அதன் நகலை தான் நான் பார்த்துளளேன். அந்த நகலின் அடிப்படையில் தான், தாவா சொத்தினை கிரையம் பெற்றதாக நான் இந்த வழக்கில் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். அய்யனார், இளம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து வா.சா.ஆ-6 கிரைய ஆவணம் எழுதி பெற்றதாக சொல்லப்படும் காலகட்டங்களில் மதுரை சொக்கிகுளத்தில் பதிவு அலுவலகம் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ-6 கேரளா மாநிலம் பாறசாலை என்ற இடத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அய்யனார், தாவா சொத்தினை மோசடியாக அபகரிக்கும் நோக்கில், தாவா சொத்து

கட்டுப்பட்ட மதுரை சொக்கிகுளத்தில் சார்பதிவளார் அலுவலகம் இருக்கும் போது, கேரளாவில் உள்ள பாறசாலையில் மோசடியாக கிரைய ஆவணத்தினை பதிந்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-6 ஆவணம் உண்மையிலேயே இளம்ஜி சௌந்திராஜன் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நகலை பார்த்துதான் தெரிந்து கொண்டேன். இளம்ஜி சௌந்திராஜன் கேரளா பாறசாலையில் கிரையம் பதிந்து கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் எனது வழக்கில் கூறுவது போல் அய்யனார் என்பவருக்கு கேரளா மாநிலம் பாறசாலை சென்று வா.சா.ஆ-6 கிரைய ஆவணம் பதிந்துகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யானரை நான் பார்த்துள்ளேன். அய்யனாரிடம், இளம்ஜி சௌந்திராஜன் தான் கிரையம் கொடுத்தாரா என்று விசாரித்துதெரிந்து கொண்டேனா என்றால் அவர் கொடுத்த ஆவண நகல்களை பார்த்துதான் நான் இந்த கிரையத்தினை தெரிந்துகொண்டேன்.

6. தாவா சொத்தில் நில அளவை கற்கள் ஊன்றப்பட்டு இருந்தது என்று நான் கூறுவதால் அதை காட்டும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நில அளவை கற்கள் எதுவும் ஊன்றப்படவில்லை என்றாலும், ஆரம்பத்தில் இருந்து தாவா சொத்து பள்ளி விளையாட்டு மைதானமாகதான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து எந்தவித வருவாய் ஆவணங்களும் எனது பெயரில் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தினை நான் மோசடியாக கிரையம் வாங்கியதால் தான் எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை கிரையம வாங்கிய போது நான் அளந்து அத்துமுால் செய்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, நானும், அய்யனாரும் சேர்த்துதான் அனைத்து வீட்டுமனைகளுக்கும் கற்கள் ஊன்றினோம். தாவா சொத்தினை கிரையம் வாங்கும் முன்பு அளந்து அத்துமால் பார்த்துதான் வாங்கினோம். நில அளவையரை வைத்துதான் தாவா சொத்தினை அளந்தேனா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு நிலத்தினை அளந்து அத்துமால் செய்ததற்கு ஆவணம் எதாவது நான் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

7. என்னைத் தவிர சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களில் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் இந்த வழக்கோடு தாக்கல் செய்த மற்ற வாதிகளும் ஒரே கால கட்டங்களில் தான் நாங்கள் கிரையம் வாங்கியதாக சொல்லி உள்ளோம் என்றால் எனக்கு தெரியவில்லை, நான் 1997 ல் கிரையம் வாங்கினேன், மற்றவர்கள் எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தினை கிரையம் வாங்கும் முன்பு அளவீடு செய்வதற்கு நில அளவையரை நான் கூட்டி வரவில்லை, அய்யனார் கூட்டி வந்தார். அந்த நில அளவையரை அரசாங்க நில அளவையரா என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. தாவா சொத்தினை முறையாக அளந்து, அத்துமால் பார்த்து நான் கிரையம் பெறவில்லை என்றாலும், மோசடியாக கிரையம் பதிந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்து கிரையம் வாங்கி உள்ளதாக எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு கேரளாவில் உள்ள பாறசாலையில் 1 செண்டு நிலம் இருந்ததாக நான் சொல்லி உள்ளதால் அந்த சங்கதி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், நான்

நேரிடையாக தளத்திற்கு சென்று 1 செண்டு நிலம் இருப்பதை இருக்கிறதாக என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ-6 ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் தான் அதனை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் கிரையம் பெற்றதாகசொல்லும் காலமான 1997ம் ஆண்டு முதல் தற்போது 25 ஆண்டுகள் ஆகி விட்டது. கடந்த 25 ஆண்டு காலமாக தாவா சொத்து காலியிடமாகதான் இருந்து வருகிறது என்றால் 2019ம் ஆண்டு வரை என்னிடம் தான் இருந்தது. அதன்பின்பு பிரச்சினை ஏற்பட்ட உடன் தான் இந்த வழககினை தாக்கல் செய்தேன். தாவா சொத்து பிரதிவாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலுமு, அதனை அய்யனார் என்பவர் மோசடியாக கிரைய ஆவணம் உற்பத்தி செய்த காரணத்தினால் தான் தற்போது வரை தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-6ல் உள்ள கையொப்பம் இளம்ஜி சௌந்திராஜன் என்பவரன் கையொப்பம் அல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சபேணை செய்துள்ளதால் அதின் உண்மை தன்மையை நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் எனது வழககில் கூறுவது போல் 1 செண்டு நிலம் எதுவும் கிடையாது என்றாலும், இந்த வழககிற்காக அ வ்வாறு நிலம் இருப்பதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. வா.சா.ஆ-5 லேஅவுட் எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து அதில் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ஆவணம் நான் தனியாகதான் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ-5 ஆவணம் தாவா சொத்திற்கான லே அவுட் அல்ல என்றாலும், இந்த வழககில் தொடர்புடைய ஆவணம் அல்ல என்றாலும சரியல்ல, வா.சா.ஆ-5 ஆவணம் தாவா சொத்தினை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் கோபாலகிருஷ்ண கேன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். டிரஸ்ட் சொத்தினை பொறுத்து நீதிமன்ற முன் அனுமதி பெயரில்தமான் எந்தவித பரிவர்த்தனை செய்யமுடியும் என்றால்எனக்கு தெரியாது. தாவா சொத்து கோபாலகிருஷ்ணனோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் நீதிமன்ற முன அனுமதி இல்லாமல் எந்த வித பரிவர்த்தனை செய்ய முடியாது என்றாலும், அவ்வாறு செய்ய இயலாது என்றாலும் எனக்குதெரியவில்லை. தாவா சொத்து ஒருபோதும் மேடு பள்ளமாக இருந்ததில்லை என்றாலும், ஆரம்பத்தில் இருந்தே விளையாட்டு மைதானமாக சமமாக இருந்தது என்றாலும் சரியல்ல, நான் வாங்கும் போது விளையாட்டு மைதானமாக இல்லை.தாவா சொத்தினை மனையிடமாக மாற்றுவதற்கு பள்ளி கல்வி துறையினரிடம் இருநது அனுமதி பெற்றுள்ளதாக சொல்வதால் அந்த ஆவணத்தினை நான் நேரிடையாக பார்த்துள்ளேனா என்றால் நகல் பார்த்துள்ளேன்.

10. வா.சா.ஆ-6 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் தான் எனது கிரைய ஆவணத்திலும் இந்த வழககுரையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை பொறுத்து எந்த காலத்திலும் பள்ளிகல்விதுறை வாங்கியதில்லை என்றாலும, தாவா

சொத்து பள்ளி விளையாட்டு மைதானமாக இருநது வருகீறது என்றாலும சரியல்ல. பள்ளிகல்விதுறையில் அனுமதி பெற்றுதான் இந்த இடம் மனையிடமாக மாற்றப்பட்டுள்ளது. தாவா செர்த்தினை மனையிடமாக மாற்றுவதற்கு பள்ளி கல்விதுறைக்கு ரூபாய்.50,000 வைப்பீடு செய்ததாக நான் சொல்வதால் அதற்கான அசல் ஆவணம் பார்த்திதல்லை என்றால் சரிதான், நகல் பார்த்துள்ளேன்.

11. தாவா சொத்தினை சுமார் 1 ஆண்டுக்கு முன்பு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வந்தார். அப்போது நான் உடன் இருந்தேன். என்னுடன் மற்ற வழக்கின் வழக்காடிகளும் அப்போது உடன் இருந்தனர். நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களை தான் அளவீடு செய்தார் என்றால், எனக்கு அதை பற்றி தெரியவில்லை, எனது சொத்தினை அளந்தார். உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தவர்களை மற்றும் அருகில் வைத்துக்கொண்டு எங்களை எல்லாம் வெளியே நிற்க வைத்து விட்டனர், அதனால் எங்களுக்கு தெரியவில்லை. அவ்வாறு அளந்து முடித்த பின்பு எந்த சொத்தினை பொறுத்து அளந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் கட்டுப்பட்ட சொத்துக்களை தான் அளவீடு செய்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மேற்படி சொத்து விளையாட்டு மைதானமாகதான் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்ன அறிக்கை தாக்கல் செய்தார் என்று அறிந்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

12. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ல் உள்ள சொத்துக்களில் எனக்கு பாத்தியம் இல்லை என்பதால்தான், நான் அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அளந்தபோது நாங்கள் யாரும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால், எங்களை உள்ளே விடாததால்தான் நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை. எனது சொத்தினை அளக்கும்போது, நான் துாரமாக நின்று பார்த்ததால் எனக்கு தெரியும். எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்தினை அளந்தார்கள் என்றால் சர்வே எண்.169/1 ல் கட்டுபட்ட சொத்தினை அளந்தார்கள். தாவாவில் கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளை, அய்யனார் மற்றும் பள்ளிகல்விதுறை ஆகியவற்றினை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் சொல்லி உள்ள பிரதிவாதிகள் சம்பந்தமான வழக்குகளில் தாவா சொத்தீல் கட்டுப்பட்ட சர்வே எண் எதுவும் குறிப்படிவில்லை என்றும்,அதன் அடிப்படையில் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்று நான் கூறுவது ஏற்கும்படியாக இல்லை என்றால் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ-6 கிரைய ஆவணம் மோசடியான கிரைய ஆவணம் என்ற போது மேற்படி அய்யானரிடம் இருந்து நான் பெற்ற கிரைய ஆவணம் வா.சா.ஆ-1 மோசடியானது என்றாலும, வா.சா.ஆ-1 அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையோ, பாத்தியதையோ ஏற்படாது என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தினை பொறுத்து எனது உரிமையை மறுத்து எனது முன் கிரையதாரரின் கிரையத்தினையும் மறுத்து எதிர் வழக்காடுவதால் தாவா சொத்த்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேரி தாக்கல் செய்த வழக்கு சட்டப்படி நிலை

நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பான்மையான ஆவணங்கள் நகல் என்பதால், அவை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து செண்டு சுமார் 5 லட்சம் மதிப்புடையது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சுமார் 4 லட்சம் மற்றும் 5 லட்சம் போகும் என்று மற்ற வழக்கில் சாட்சியம் அளித்தவர்கள் சொல்லி இருநதால் அது தவறு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குள் தற்போது பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் செல்ல முடியாது என்றால் சுற்றிலும் முள்கம்பி வேலி அமைத்துள்ளதால் யாரும் செல்ல முடியாது. தாவா சொத்தில் தாவா தாக்கல் செய்யும் முனபோ, தாவா செய்யும் பின்போ, வழக்கு தாக்கல் செய்த காலத்திலோ அனுபவத்தில் இல்லாமல் பொய்யான சங்கதிகளை கொண்டு நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

14. தாவா சொத்து தற்போது வரை பள்ளி விடுதியாகவும், விளையாட்டு மைதானமாகவும் இருந்து வருகிறது என்றாலும், நான் ஒருபோதும் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண்.156/19 மற்றும் அசல் வழக்கு எண்.193/19 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ள வா.சா.1 சாட்சியங்களை தெரிந்துகொண்டு இந்த வழக்கில் அதற்கு ஏற்ப சாதுர்யமாகவும், பொய்யாகவும் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பம் முதல் தற்போது வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதால், நான் தாவாவில் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.